Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்
நடுநிலை நாளிதழ்
PRGI NO: TNBIL/25/A3556
DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 057 | புதன்கிழமை Wednesday | 27.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

## சுற்றுசூழல் சட்டங்களை மீறும் கர்நாடக அரசு:

# மேகதாது அணை விவகாரம் தொடர்பாக பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் விஜய் கடிதம்



கர்நாடக அரசால் காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள பூமிபூஜை நிகழ்வைத் தொடர்ந்து, தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டிடவும்,விவசாயிகளின் நலனைக்காத்திடவும்,தமிழ்நாடு முதல்- அமைச்சர் ஜோசப்விஜய்,(26.05.2026) இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதி உள்ளார். இதுதொடர்பான அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

மாண்பமை சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்பையும், காவிரி நடுவர் மன்றத்தின் (CWDT) இறுதி ஆணையையும்அப்பட்டமாக மீறும் வகையில், காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது நீர்த்தேக்கத்திற்கான பூமி பூஜை நடைபெறும் என்று கர்நாடக அரசு அறிவித்துள்ளதை கனிவான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவதாகவும், கர்நாடக மாநில துணை முதல்-மந்திரி இது தொடர்பாக பொது வெளியில் தெரிவித்திருப்பது தங்கள் வாழ்வாதாரத்திற்காக காவிரி ஆற்றையே நம்பியிருக்கும் தமிழ்நாட்டின் லட்சக்கணக்கான விவசாயிகளிடையே, மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

காவிரி நதிநீர் பிரச்சினை என்பது மிகவும் முக்கியமானதொன்றாகும் என்றும், இப்பிரச்சினைக்கு சுமார் முப்பது ஆண்டுகளுக்கு மேல் நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பின்னரே தீர்வு காணப்பட்டது என்பது இந்தியப் பிரதமர் அவர்கள் அறிந்ததே என்றும், 16.02.2018 அன்று மாண்பமை சுப்ரீம்கோர்ட்டு வழங்கியதீர்ப்புதற்போது அமல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், மேகதாது திட்டம், காவிரி நடுவர் மன்றம் அனுமதித்த திட்டங்களின் பட்டியலில் இடம்பெறவில்லை என்றும், இதனை மேற்கண்ட சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்பும் உறுதிப்படுத்தியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்பில் தலையீடு

மேலும், காவிரிப் படுகையானது நீர்ப் பற்றாக்குறை உள்ள படுகை என்பதைக் கருத்தில் கொண்டு,50 சதவீத நம்பகத்தன்மை அடிப்படையில் கிடைக்கக்கூடிய நீர் ஏற்கனவே சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதால் கூடுதல் நீரைப் பயன்படுத்துவதற்கோ அல்லது புதிய பெரிய நீர்த்தேக்க த்தை உருவாக்குவதற்கோ எவ்வித வாய்ப்பும் இல்லை என்பதாலும் 16.02.2018 தேதியிட்ட தீர்ப்பின் மூலம் மாண்பமை சுப்ரீம்கோர்ட்டால் உறுதிசெய்யப்பட்ட,தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்பில் குறிப்பாக அனுமதிக்கப்பட்டுள்ள திட்டங்களைத் தவிர்த்து, காவிரி ஆறு அல்லது அதன் துணை நதிகளின் குறுக்கே வேறு ஏதேனும் புதிய திட்டத்தைத் திட்டமிடுவது, மேற்குறிப்பிட்ட சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்பில் தலையிடுவதற்குச் சமமானதாகும் என்று தமிழ்நாடு முதல்-அமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மாண்பமை சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்பின் மூலம் திருத்தப்பட்ட இறுதித் தீர்ப்பின்படி, தமிழ்நாட்டிற்கு உறுதி செய்யப்பட வேண்டிய நீர்வரத்துக்கான மூன்று கூறுகளில் ஒன்றான 'கட்டுப்பாடற்ற நீர்ப்பிடிப்புப் பகுதியிலிருந்து உருவாகும் நீர்வரத்தைத் தடுப்பதற்கு, கர்நாடக மாநிலம் முயன்று வருவதாகத் தமிழ்நாடு உறுதியாகக் கருதுகிறது என்றும், கர்நாடகா-தமிழ்நாடு எல்லையின் மிக அருகிலேயே, 67.16 டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட ஒரு புதிய மேகதாது திட்டத்தை முன்மொழிவதன் மூலம் கர்நாடக மாநிலம் இம்முயற்சியை மேற்கொள்வதாகத் தமிழ்நாடு கருதுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், 16.02.2018 தேதியிட்டதனதுதீர்ப்பில், நீர்ப்பிடிப்புப் பகுதியின் மேல்பகுதியில் அமைந்துள்ள மாநிலமானது, கீழ்ப்பகுதியில் அமைந்துள்ள மாநிலத்திற்குத் திட்டமிடப்பட்ட நீர் வினியோகத்தைப் பாதிக்கும் வகையிலான எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளக்கூடாது என்று மாண்பமை சுப்ரீம்கோர்ட்டு அறுதியிட்டுத் தீர்ப்பளித்துள்ளது என்பதால், கர்நாடக மாநிலம் ஒரு புதிய நீர்த்தேக்கத்தைக் கட்டுவதற்குமுன்மொழிந்துள்ள இச்செயலானது, மேற்கூறிய சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்பின் மீதான ஒரு தெளிவான மீறலாகவே அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

இணக்கமான தீர்வு

இதுதொடர்பாக,கர்நாடக மாநிலம், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு (EIA) ஆய்வை மேற்கொள்வதற்கான ஆய்வு வரையறைகள் (Terms of Reference – ToR) பெற முயன்றபோது,

சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் (MoEF & CC) வல்லுநர் மதிப்பீட்டுக் குழுவானது, 19.07.2019 அன்று நடைபெற்ற தனது கூட்டத்தில்,


இதில் மாநிலங்களுக்கு இடையிலான சிக்கல்கள் உள்ளதைக் கருத்தில் கொண்டு, சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு இடையே ஒரு இணக்கமான தீர்வு எட்டப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்து, அக்கோரிக்கையைத் திருப்பியனுப்பியது என்பதை கவனத்திற்குக் கொண்டு வருவதாகவும், மேலும், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றஅமைச்சகம்(MoEF & CC) சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வை மேற்கொள்வதற்கான ஆய்வு வரையறைகளை (ToR) இதுவரை வழங்கக்கூட இல்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும், எனவே, மேகதாது திட்டப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல கர்நாடக மாநிலம் மேற்கொள்ளும் முயற்சி, மாண்பமை சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்பை மட்டுமல்லாமல், தற்போது நடைமுறையில் உள்ள சுற்றுச்சூழல் சட்டங்களையும் அப்பட்டமாக மீறும் செயலாகும் என்றும்தனது கடிதத்தில் தமிழ்நாடு முதல்-அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இத்தகைய சூழலில், 16.02.2018 தேதியிட்ட தீர்ப்பை அதன் எழுத்துப்பூர்வமற்றும் உள்ளார்ந்த உணர்வுகளுக்கு இணங்கச் செயல்படுத்தும் கடமை கொண்ட மத்திய ஜல் சக்தி அமைச்சகமும் (MoJS) மற்றும் மத்திய நீர்வள ஆணையமும் (CWC) தமிழ்நாடு அரசின் கோரிக்கையைப் பரிசீலிக்காமலேயே, கர்நாடகாவின் மேகதாது திட்ட முன்மொழிவை ஏற்றுப் பரிசீலித்து வருவது வியப்பளிக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

இச்சூழலில், மேகதாது திட்ட முன்மொழிவின் விரிவான திட்ட அறிக்கையானது (DPR), 05.02.2007 தேதியிட்ட காவிரி நடுவர் மன்றத்தின் (CWDT) இறுதி ஆணைக்கும், 16.02.2018 தேதியிட்ட மாண்பமை சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்புக்கும் முரணாக அமைந்திருப்பதால், அத்திட்ட அறிக்கையை நிராகரிக்குமாறு மத்திய ஜல் சக்தி அமைச்சகம் மற்றும் மத்திய நீர்வள ஆணையம்(CWC) ஆகியவற்றில் தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்வதாகவும், படுகையில் அமைந்துள்ள பிற மாநிலங்களின் ஒப்புதலைப் பெறாமல் எந்தவொரு புதிய திட்டத்தையும் மேற்கொள்ளக்கூடாது என்றும், மாண்பமை சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்பை எவ்வகையிலும் மீறக்கூடாது என்றும் கர்நாடக அரசுக்கு அறிவுறுத்துமாறு இந்தியப் பிரதமர் அவர்களை தமிழ்நாடு முதல்-அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "சட்ட விதிகளுக்கு உட்பட்டே நடவடிக்கை" எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா ஏற்பு தொடர்பாக சபாநாயகர் விளக்கம்



சென்னை:

சட்ட விதிகளுக்கு உட்பட்டே அதிமுக எம்எல்ஏக்கள் ராஜினாமா கடிதங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதாகசபாநாயகர்ஜே.சி.டி. பிரபாகர் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களை கைப்பற்றிய விஜய்யின் தவெக, காங்கிரஸ், விசிக, கம்யூனிஸ்ட்,ஐயூஎம்எல் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைத்துள்ளது. இதனிடையே, ஆட்சியை தக்க வைக்க நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில்,அதிமுகசாரில்சி.வி. சண்முகம், எஸ்.பி. வேலுமணி, சி.விஜயபாஸ்கர் தரப்பில் 25 எம். எல்.ஏக்கள் தவெக அரசுக்கு ஆதரவு அளிப்பதாக கூறியதால், அதிமுக கட்சிக்குள் பிளவு ஏற்பட்டது.

கட்சி தலைமையின் விதிகளை மீறிய 25 எம்எல்ஏக்களையும் தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி தரப்பில் சபாநாயரிடம் கோரிக்கை மனு வழங்கப்பட்டது. இதில், சிலர் மீண்டும் எடப்பாடி பழனிசாமியை நேரில் சந்தித்து இபிஎஸ் அணியில் தங்களை இணைத்துக்கொண்டனர். இதனால் சி.வி.சண்முகம் தரப்புகுழுவில்சலசலப்பு ஏற்பட்டது.

இந்நிலையில், நேற்று சி.வி.சண்முகம் தரப்பில் தவெக அரசுக்கு ஆதரவு அளித்த மூன்று அதிமுக எம்எல்ஏக்கள் தங்கள் எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தனர். அவர்களின் ராஜினாமா கடிதம் உடனடியாக ஏற்கப்பட்டு மூவரும் தவெகவில் இணைந்தனர். மேலும் ஒரு அதிமுக எம்எல்ஏ தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த எடப்பாடி பழனிசாமி தரப்பினர், ராஜினாமா கடிதங்களை ஏற்கக் கூடாது என்று சபாநாயகரிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இதனிடையே சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர், "சட்ட விதிகளுக்கு உட்பட்டே அதிமுக எம்எல்ஏக்களின் ராஜினாமா கடிதம் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முழுக்கமுழுக்கசபாநாயகரின் சட்ட விதிகளின்படியே நடவடிக்கை எடுத்தேன்.

எடப்பாடி பழனிசாமி தரப்பினர் வழங்கிய மனு மீது முறையாக நடவடிக்கை எடுக்க சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளதே தவிர மனுவை ஒதுக்கவில்லை. தவெக அரசுக்கு ஆதரவு கூடுகிறதா குறைகிறதா என்பதை கவனிப்பது எனது வேலை அல்ல, எனது வேலை எண்ணிக்கையை சரி பார்ப்பது மட்டுமே." என்று கூறினார்.

## வரி விளம்பரங்கள்




தினத்தளம்
DHINATH DHALAM

| | | | |
|---|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் | |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் | |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் | |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# தொடர்ந்து 5வது முறையாக உயர்ந்த பெட்ரோல், டீசல் விலை லிட்டர் விலை என்ன?

சென்னை: பெட்ரோல், டீசல் விலை சற்று உயர்ந்துள்ளது. அதன்படி, சென்னையில் பெட்ரோல் விலை 24 காசுகள் உயர்ந்து ஒரு லிட்டர் ரூ. 108.01-க்கும், டீசல் விலை 23 காசுகள் உயர்ந்து ஒரு லிட்டர் ரூ. 99.78-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.



எங்கோ ஒரு நாட்டில் போர் நடக்கிறது என இனி நாம் அதனை கண்டு கொள்ளாமல் இருந்துவிட முடியாது. ஏனெனில் எங்கோ ஒரு நாட்டில் நடக்கக்கூடிய போர் தான் உங்களுடைய வீட்டு காய்கறி செலவில் தொடங்கி பால் ,முட்டை ,மளிகை பொருள் ,போக்குவரத்து என அனைத்து செலவுகளையும் உயர்த்த செய்திருக்கிறது. இந்தியா தனக்கு தேவையான கச்சா எண்ணெயை பெரும்பாலும் வெளிநாடுகளில் இருந்து தான் இறக்குமதி செய்து பெட்ரோல், டீசல் ஆக மாற்றி பயன்படுத்துகிறது. குறிப்பாக பெரும்பாலான கச்சா எண்ணெயைநாம்வளைகுடா நாடுகள் மற்றும் ஈரானில் இருந்து தான் வாங்கி வந்தோம். போர் காரணமாக பிப்ரவரி 28ஆம் தேதிக்கு பிறகு வளைகுடா நாடுகள் மற்றும் ஈரானிடம் இருந்து இந்தியாவிற்கு கச்சா எண்ணெய் வந்து சேரவில்லை. உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்துவிட்டது இதனால் முன்பை விட அதிக விலை கொடுத்து கச்சா எண்ணெய் வாங்கி அதிக செலவு செய்து அவற்றை பெட்ரோல் டீசல் ஆக மாற்றி தான் இந்தியன் ஆயில் ,பாரத் பெட்ரோலியம் மற்றும் எச்பி ஆகிய நிறுவனங்கள் விற்பனை செய்கின்றன.

ஈரான் - அமெரிக்கா போரின் எதிரொலியாக கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருகிறது. இதன் காரணமாக பெட்ரோல், டீசல் விலையானது தொடர்ந்து உயர்வை சந்தித்து வருகிறது. மே 15-ஆம் தேதி பெட்ரோல், டீசல் விலை ரூ. 3 உயர்ந்த நிலையில், மே 19-ஆம் தேதி மீண்டும் 90 பைசா அதிகரிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மே 23ஆம் தேதி கிட்டத்தட்ட 91 பைசா அதிகரிக்கப்பட்ட நிலையில், நேற்று (மே 25) 2 ரூபாய் 50 காசுகள் அதிகரிக்கப்பட்டது.

அதன்படி சென்னையில் பெட்ரோல் விலை லிட்டர் ரூ. 107.77-க்கு விற்பனை செய்யப்பட்டது. அதேபோல், டீசல் விலையும் 2 ரூபாய் 57 காசுகள் அதிகரித்து ஒரு லிட்டர்ரூ.99.55-க்குவிற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில், இன்று சென்னையில் பெட்ரோல் விலை 24 காசுகள் உயர்ந்து ஒரு லிட்டர் ரூ. 108.01-க்கும்,டீசல்விலை 23 காசுகள் உயர்ந்து ஒரு லிட்டர் ரூ. 99.78-க்கும் விற்பனைசெய்யப்படுகிறது. பெட்ரோல் மற்றும் டீசல்தொடர்ந்துஉயர்ந்து வருவதை போன்றே சி.என்.ஜி சிலிண்டர் விலையும் அதிகரிக்கத் தொடங்கி இருக்கிறது. மே 23ஆம் தேதியன்று சி.என்.ஜி விலை கிலோவுக்கு ரூ. 1 உயர்ந்த நிலையில், இன்று கிலோவுக்கு ரூ. 3.50 உயர்ந்திருக்கிறது. அதன்படி, சென்னையில் ஒரு கிலோ சி.என்.ஜி சிலிண்டர் ரூ. 91.50க்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில், ரூ.95க்குவிற்பனையாகி வருகிறது.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



ஈரோடு மாநகராட்சி மாநகர நல அலுவலர் கௌரி சரவணன் நேற்று (25.05.2026) மண்டலம் 2, அலுவலகத்தில் தூய்மை பணியாளர்களின் வருகை பதிவேடு மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் காலை உணவின் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாநகராட்சி மாநகர நல அலுவலர் கௌரி சரவணன் நேற்று (25.05.2026) மண்டலம் 2, சின்ன மார்க்கெட் பகுதியில் உள்ள அம்மா உணவகத்தில் உணவின் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் தலைமையில் நேற்று (25.05.2026) மாநகராட்சி மைய அலுவலக கூட்ட அரங்கில் வருவாய் அலுவலர்கள் உடனான கலந்தாலோசனை கூட்டம் நடைபெற்றது. உடன் துணை ஆணையாளர் சரஸ்வதி, உதவி ஆணையாளர்கள், வருவாய் அலுவலர்கள் உட்பட வரிவசூல் அலுவலர்கள் உள்ளனர்.

### உளுந்தூர்பேட்டை அருகே கெடிலம் அரசு டாஸ்மாக் கடையை அகற்ற கோரி

# நூற்றுக்கணக்கான பெண்கள் கடையை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டு வருவதால் பரபரப்பு



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே கெடிலம் பகுதியில் உள்ளது அரசு டாஸ்மாக் மதுபான கடை.. பொதுமக்கள் குடியிருக்கும் பகுதியில் உள்ள இந்த டாஸ்மாக் கடை தினம் திறக்கப்படுவதால் பள்ளி செல்லும் மாணவ, மாணவிகள் மற்றும் கிராமப்புறங்களுக்கு செல்லும் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்படுவதாகவும். இரவு நேரங்களில் இந்த டாஸ்மாக் கடையை ஒட்டி உள்ள குடியிருப்பு வீடுகளில் பொதுமக்கள் அச்சத்துடன் குடியிருந்து வருவதாகவும், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு பாதுகாப்பு இல்லை என்பதால் இந்த டாஸ்மாக் மதுபான கடையை அகற்ற கோரி 100க்கும் மேற்பட்ட பெண்கள் உள்ளிட்ட பொதுமக்கள் கடையை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.இது குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு வந்த உளுந்தூர்பேட்டை டிஎஸ்பி அசோகன் மற்றும் திருநாவலூர் காவல் நிலைய போலீசார் பெண்களிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இந்தக் கடையை இனிமேல் திறக்கக் கூடாது என்றும் திறந்தால் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட போவதாகவும் போலீசாரிடம் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இது குறித்து அதிகாரியிடம் பேச்சுவார்த்தை நடத்தி உரிய நடவடிக்கைஎடுக்கப்படும் என உறுதி அளித்ததின்பேரில்அனைவரும் கலைந்து சென்றனர்.அரசு டாஸ்மாக் கடையை அகற்றக்கோரி பெண்கள் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்ட சம்பவம் பரபரப்பினை ஏற்ப டுத்தி உள்ளது.



சேலம் மாவட்டம்,கருப்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் காடையாம்பட்டி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் (26.05.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற் கொண்டார்கள்.



ஈரோடு மாநகர நல அலுவலர் கௌரி சரவணன் நேற்று (25.05.2026) மண்டலம் 1, வார்டு எண் 6, பி.பெ.அக்ரஹாரம் பகுதியில் தூய்மைத் திருவிழா விழிப்புணர்வு மற்றும் சிறப்புக் குழு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை ஆய்வு மேற்கொண்டார்.

### ஆண்டிப்பட்டி அருகே கொண்டமநாயக்கன்பட்டி பகுதியிலுள்ள பேரூராட்சி குப்பை கிடங்கில்

# அதிகளவில் குப்பைகளை கொட்டி அடிக்கடி தீ வைப்பதால் புகைமூட்டம் ஏற்பட்டு காற்றில் பறக்கும் புகை

## உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஊர்மக்கள் கோரிக்கை



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகள் ஐந்தாவது வார்டு பகுதியில் உள்ள குப்பை கிடங்குகளில் கொட்டப்படுகிறது.

இந்த குப்பைகளை பேரூராட்சி நிர்வாகம் சார்பில் தீ வைத்து எரிக்கப்படுவதாலும் குப்பை கிடங்குகளில்தீ மளமளவென எரிந்து கடும் புகை மூட்டமாக வெளியேறி வருகிறது.

குறிப்பாக குப்பை கிடங்கு அமைந்துள்ள பகுதிக்கு அருகிலேயே ஆண்டிபட்டியில் இருந்து கொண்டமநாயக்கன்பட்டி செல்லக்கூடிய முக்கிய சாலையும், கொண்டமநாயக்கன்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியும், 200க்கும் மேற்பட்ட குடியிருப்புகளும் அமைந்துள்ளதால் குப்பைகளில் எரியும் தீயின் மூலம் ஏற்படும் புகை நேரடியாக பள்ளி வளாகத்திற்குள் செல்வதால் பள்ளி மாணவ மாணவிகளுக்கு சுகாதார சீர்கேடு ஏற்பட்டு மூச்சுத்திணறல் சுவாச கோளாறு உள்ளிட்ட நோய்தொற்று ஏற்படுவதாகவும் இதனால் தினந்தோறும் பள்ளி மாணவ மாணவிகள் கடும்சிரமத்திற்குஆளாவதாகவும் குறிப்பாக பள்ளி மைதானத்தில் விளையாடும்போது மாணவ மாணவிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாவதாக குற்றம் சாட்டியுள்ளனர்

மேலும் 200க்கும் மேற்பட்ட குடியிருப்பு வளாகங்களிலும் முழுமையாக புகைமண்டலம் சூழ்ந்து காணப்படுவதால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உள்ள குடியிருப்பு வாசிகளும் தினந்தோறும் மிகுந்த சிரமத்தை சந்தித்து வருவதாகவும் குற்றம் சாட்டுகின்றார்.


இது தொடர்பாக பள்ளி நிர்வாகம் சார்பிலும் குடியிருப்பு வாசிகள் சார்பிலும் கடந்த பல முறை ஆண்டிப்பட்டி பேரூராட்சி நிர்வாகம் முதல்மாவட்ட நிர்வாகம் வரை புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் அலட்சியமாக பதில் அளிப்பதாக கூறுகின்றனர்.

எனவே மாணவர்கள் சுகாதாரமாக படிப்பதற்கு ஏற்பாடு செய்யும் வகையில் தமிழக அரசும் மாவட்ட நிர்வாகமும் உரிய நடவடிக்கை எடுத்து உடனடியாக இந்தப் பகுதிகளில் கொட்டபடும் குப்பைகளை அகற்றி வேறு பகுதிகளில் கொட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ரஞ்சித் சிங்கிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கோவை கண்ணம்பாளையம் பகுதியில் எர்த் ட்ராகன் மார்ஷியல் ஆர்ட்ஸ் பயிற்சி மையத்தில் பயிற்சி பெறும்

# மாணவ, மாணவியர்கள் 7 பேர், கராத்தேவில் கருப்பு பட்டய தேர்வில் வெற்றி பெற்றனர், அவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது

கோவை கண்ணம்பாளையம் பகுதியில் கடந்த 13 ஆண்டுகளாக எர்த் ட்ராகன் மார்ஷியல் ஆர்ட்ஸ் எனும் பயிற்சி மையம் செயல்பட்டு வருகின்றது. இதன் மாணவ மாணவியர்களுக்கு ப்ளாக் பெல்ட், மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் விழா கோவை கண்ணம்பாளையம் பகுதியில் உள்ள புனித அடைக்கல மாதா மண்டபத்தில், பொதுமக்கள், நடைபெற்றது.கடந்த ஒரு வாரம் ஒவ்வொரு பிரிவுகளில் மாணவர்கள் தங்களது திறனை வெளிபடுத்தினர். ப்ளாக் பெல்ட் என்பது சாதாரண ஒரு விஷயம் இல்லை



தலைமை மாஸ்டராக சென்சாய் நாக சுந்தரம் மாணவ மாணவியர்களுக்கு கராத்தே பயிற்சிகளை வழங்கி வருகின்றார். இங்கு பயிலும் மாணவ மாணவியர்கள் 7 பேரான, அனுஸ்ரீ, விஷ்ணு, அன்பு, ஸ்வஸ்திக்கா, ஷாஜித் வில்சன், மது ரோஷன், பாலசந்திரன் ஆகியோர் கருப்பு பட்டய தேர்ச்சி பெற்றனர். கடந்த ஒரு வார காலமாக நடைபெற்ற பயிற்சியில், பல்வேறு பிரிவுகளில் வெற்றி பெற்று இந்த தகுதிக்கு தேர்ச்சி பெற்றனர். அவ்வாறு தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியர்கள் மற்றும் மாணவ மாணவியர்களின் பெற்றோர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக பிஎஸ்ஜி மருத்துவமனையின் பேராசிரியர் மற்றும் கார்டியாலஜி துறைதலைவர் தமிழரசு, ரென்சி தங்கவேலு ஆகியோர் கலந்து கொண்டு மாணவ மாணவியர்களுக்கு ப்ளாக் பெல்ட், அதற்கான சான்றிதல்களை வழங்கினர். செய்தியாளர்களை சந்தித்து பேசிய சென்சாய் நாகசுந்தரம் கூறியதாவது.. கோவை கண்ணம்பாளையம் பகுதியில் ப்ளாக் பெல்ட் அவார்ட் நிகழ்ச்சி அதற்குக் முழு திறமைகளையும் வெளிபடுத்த வேண்டும் இதனை மாணவர்கள் செய்து அசத்தியுள்ளனர் அதற்குகு எனது வாழ்த்துக்கள் என தெரிவித்தார். ஆரம்ப நிலை வெள்ளை பெல்டில் துவங்கி 10 வது நிலையானப்ளாக்பெல்ட் வழங்க படுகின்றது என்றார். தற்போதய காலத்தில் கராத்தே என்பது அனைவருக்கும் மிக முக்கியம் பெண்களுக்கு தங்களை தற்காத்து கொள்ள மிகவும் அவசியம் என தெரிவித்தார் என்பது குறிப்பிடத்த க்கது.

# காங்கிரஸ் இல்லை என்றால் திமுக ஒரு காலி டப்பா

## தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவர் பெருமாள் சாமி கடும் குற்றச்சாட்டு

தூத்துக்குடி காங்கிரஸ் இல்லை என்றால் திமுக காலி டப்பா இந்தியாவின் முகம் ஸ்டாலின் என்றால் ஏன் கொளத்தூரில் தோற்றுப் போனார்.இந்தியாவின் முகம் ராகுல் காந்தி மட்டும் தான் அடுத்த பிரதமர்



ராகுல் காந்தி தான்

மின் தடை குடிநீர் பிரச்னையை வைத்து சில அதிகாரிகளை வைத்து திமுக அரசியல் செய்து வருகிறது. பாஜகவின் கள்ள குழந்தை திமுக செல்ல பிள்ளை அதிமுக

தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவர் பெருமாள் சாமி கடும் குற்றச்சாட்டு

தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவர் பெருமாள் சாமி செய்தியாளர்களை சந்தித்தார் அப்போது அவர் கூறுகையில், திமுக காங்கிரஸ் கூட்டணி உடைந்தது எல்லையற்ற மகழ்ச்சி, காங்கிரஸ் துரோகி, ராகுல் காந்தி துரோகி என்று தீர்மானம் போடப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் இல்லை என்றால் 20 வருடம் ஆட்சியில் இருந்து இருக்க முடியாது.

காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 2 அமைச்சர் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன். காங்கிரஸ் கட்சிக்காரர்களும் மிக மகிழ்ச்சியாக உள்ளார்கள்.

தூத்துக்குடியை சேர்ந்த காங்கிரஸ் கட்சிகாரர்கள் 30 பேர் திமுகவில் சேர்ந்து இருக்கிறார்கள். திமுக என்றால் அந்த வால் தான் இவர்கள்( திமுகவில் சேர்ந்தவர்கள்) திமுக பக்கம் போயிருக்கிறார்கள். இதைத்தான் ராகுல் காந்தி எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.காங்கிரஸ்தூய்மையாகவேண்டும்.

நேற்று இளைஞர் அணி கூட்டத்தில் உதயநிதி, பாஜகவிற்கு காங்கிரஸ் வேலை பார்ப்பதாக கூறியிருக்கின்றார். திமுகவின் மாப்பிள்ளை சார் சபரீசன் நிர்மலா சீதாராமனை சந்திக்கவில்லையா? துர்காவும்நிர்மலாசீதாராமனைசந்திக்கவில்லையா?

இந்தியாவின் முகம் ஸ்டாலின் என்றால் ஏன் கொளத்தூரில் தோற்றுப் போனார். இந்தியாவின் முகம் ராகுல் காந்தி மட்டும் தான் அடுத்த பிரதமர் ராகுல் காந்தி தான் அனைத்து இடத்திலும் காங்கிரஸ் எழுச்சி பெற்றது போல் தமிழ்நாட்டில் எழுச்சி பெற உள்ளது. திமுக கூட்டணி இல்லாமல் போனால் 12 இலிருந்து 14% ஓட்டு வாங்கினால் பெரிய விஷயம் 25 கூட்டணி வச்சி வாங்குன திமுக 107 சீட்டு வாங்குன விஜய் பார்த்து எங்களை வச்சு தான் ஆட்சி நடத்துகிறீர்கள் என்று கூறுகிறார்கள்.திமுகதனித்து நின்று எந்த கட்சியுடனும் கூட்டணி இல்லாமல் ஆட்சியைப் பிடித்தால் நான் அண்ணா அறிவாலயத்தில் சம்பளமே இல்லாத வாட்ச்மனாக சேர்ந்து கொள்கிறேன். காங்கிரஸ் இல்லை என்றால் படு தோல்வி அடைந்து இருக்கும் திமுக காங்கிரஸ் விஜய்யுடன் கூட்டணி சேரக்கூடாது என்று பாஜக கொடுத்த அசைன்மென்ட் காங்கிரஸ் இல்லை என்றால் திமுக காலி டப்பா, insta, fb, you tube தான் விஜய் வெற்றிக்கு காரணம் என்று கூறுகிறார்கள். ஆனால் திமுகவிற்கு அலட்சிய போக்கு, உங்களை பிடிக்க வில்லைஆகையால்தான்திமுகவைமக்கள்வெறுத்து விட்டார்கள்.ஆகவே,திமுகஎப்படி தோற்றோம்என்று ஆராயாமல் எப்படி வெற்றி பெற்றோம் என்று ஆராய வேண்டும்.திமுக இல்லாததால் காங்கிரஸ்தனித்துவ கட்சியாக வளரும். ஜாதி, பணம் பார்த்து வாக்களிக்கவில்லை இதை வைத்து தான் திமுக அரசியல் பேசுகிறார்கள். திமுக கொடிய அரக்கன் விடியல் கிடைத்து விட்டது 2ஜீ வழக்கு இன்னும் நிலுவையால் தான் உள்ளது. அதை வைத்து தான் திமுகவை பாஜக ஆட்டி படைக்கிறது.

இலங்கைத் தமிழர்கள் லட்சக்கணக்கானோர் இறந்ததாக கூறுகிறார்கள். ஆனால் இறந்தது 70 ஆயிரம் பேர் தான் இறந்தார்கள்.இருந்தும் காங்கிரஸ் அங்கு மக்களுக்கு மறு வாழ்வு கொடுத்து சாதனை செய்து உள்ளது. அதனை வெளியில் சொல்லாதது தான் காங்கிரஸ். வீடு வசதி என்றும் பாத்துகாத்து தான் உள்ளது. திமுக கடும் எச்சரிக்கை விடுக்கின்றேன். கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றேன். காங்கிரஸ் பற்றி இனி திமுக பேச கூடாது.

மின் தடை, குடிநீர் பிரச்சனையை வைத்து சில அதிகாரிகளை வைத்து திமுக தற்போது வரை அரசியல் செய்து வருகிறது. பாஜகவின், கள்ள குழந்தை திமுக, செல்ல பிள்ளை அதிமுக என்று தூத்துக்குடிவடக்குமாவட்டகாங்கிரஸ்கட்சிதலைவர் பெருமாள்சாமி தெரிவித்தார்.

## அடகுவைக்க வந்த விவசாயிகளிடம் 12 பவுன் நகை பெற்று மோசடி: கூட்டுறவு ஊழியர்கள் கைது



தஞ்சாவூர்: திருவோணம் அருகே கூட்டுறவு வங்கியில் அடகு வைக்க வந்த விவசாயிகளிடம் 12 பவுன் நகைகளை பெற்று, பணத்தை கொடுக்காமல் மோசடி செய்த கூட்டுறவு வங்கியின் செயலாளர், எழுத்தர் ஆகியோர் போலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.தஞ்சாவூர் மாவட்டம் திருவோணத்தை அடுத்த தளிகைவிடுதி கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் நல்லையன், வைரக்கண்ணு, முருகேசன்.இவர்கள் 2023-ம் ஆண்டு தளிகைவிடுதியில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் தங்களின் நகைகளை அடகு வைக்க தனித்தனியாக சென்றுள்ளனர்.அப்போது, அங்கு பணியில் இருந்த வங்கிச் செயலாளர் செல்வராஜ், எழுத்தர் பழனியப்பன் ஆகியோர்விவசாயிகளிடம் இருந்து 12பவுன் நகைகளை அடகு வைக்க பெற்றுக் கொண்டு, மறுநாள் வந்து பணத்தை பெற்றுச் செல்லுமாறு தெரிவித்துள்ளனர்.

அதன்படி, விவசாயிகள் 3 பேரும் மறுநாள் சென்று பணத்தைகேட்டபோது,அலுவலர்கள் பணத்தைகொடுக்காமல்அலைக்கழித்துள்ளனர்.இதுகுறித்து கூட்டுறவுத் துறையின் உயர் அதிகாரிகளிடம் விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

## தூத்துக்குடியில் மாவட்ட மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன்தலைமையில் நடைபெற்ற

# திங்கள்கிழமை மக்கள் குறைகளையும் நாள் கூட்டத்தில் 410 மனுக்கள் பெறப்பட்டுள்ளது



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன், தலைமையில் திங்கள்கிழமை மக்கள் குறைகளையும் நாள் கூட்டம் நடைபெற்றது. பொதுமக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனை ப்பட்டா, கலைஞரின் கனவு இல்லம்திட்டம், தொழில் கடனுதவி, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 410 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது.

பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு துறைச் சார்ந்த அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார். முன்னதாக, மாற்றுத்திறனாளிகளை நேரில் சந்தித்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 23 கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டு அவர்களின் கோரிக்கைகளை கனிவுடன் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, தாப்பாத்தி, இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் உள்ள 02 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் காப்பீட்டு அட்டைகளையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் சார்பாக 03 பயனாளிகளுக்கு தலா ரூ.4,720/- என மொத்தம் ரூ.14,160/- மதிப்பில் விலையில்லா தேய்ப்பு பெட்டிகளையும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம் சார்பாக வன்கொடுமைத் தடுப்பு சட்டத்தின் கீழ் 02 பயனாளிகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் ஆணைகளை மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் வழங்கினார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் மூ.குருச்சந்திரன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ரமணன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் செந்தில்வேல் முருகன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பென்னட் ஆசீர், துணை ஆட்சியர் (பயிற்சி) மகேந்திரன் மற்றும் அனைத்துத்துறை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தமிழக அரசு முன்வர வேண்டும்

## முதலமைச்சர் விஜய்க்கு கோவை சிவாஜி காலனி பகுதியில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சி சார்பாக கோரிக்கை



தமிழகத்தில் கடந்த 20 ஆண்டுகளாக, தமிழக முற்போக்கு மக்கள் கட்சி செயல்பட்டு வருகின்து. இதன் மாநில தலைவராக வழக்கறிஞர் சக்திவேல் இருந்து வருகின்றார். இவரது தலைமையில் கோவை சிவாஜி காலனி பகுதியில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் கோவை மண்டல அலுவலகம் அமைந்துள்ளது. இங்கு இக்கட்சியின் மாநில துணைத் தலைவரும் வழக்கறிஞருமான புஸ்பாணந்தம் செய்தியாளர்களை சந்தித்து பேசினார் அப்பொழுது அவர் கூறியதாவது..

தமிழக வெற்றி கழகம் பதவியேற்று 12 நாட்களுக்குள் சூலூரில் 10 வயது குழந்தை பாலியல் பலாத்காரம் செய்ய பட்டு படுகொலை செய்யபட்டுள்ளது பெரும் வேதனை அளிக்கிறது. குறிப்பாக சட்டம் ஒழுங்கு, காவல்துறையை தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள தமிழக முதல்வர், இந்த விஷயத்தில் குற்றவாளி மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த நடவடிக்கை வேறு மாவட்டங்களில் இது மாதிரியான தவறுகளை செய்ய, குற்றவாளிகளை தடுக்கும் வகையில் அமைய வேண்டும். அத்தகைய தண்டனையை அரசு வழங்க வேண்டும் என்று கேட்டு கொண்டார். மேலும் திருச்சி அரசு மருத்துவமனையில் தவறான சிகிச்சை காரணமாக உயிரிழந்த செவிலியர் சீதா லட்சுமிக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும், தவறான சிகிச்சை வழங்கிய மருத்துவர்கள் பணியிடை நீக்கம் செய்ய வேண்டும் என்று தமிழக அரசை கேட்டு கொள்வதாகவும், கோவை கோவில் மேடு பகுதியில் பேருந்து நிலையம் அருகே 100 மீட்டருக்குள் உள்ள டாஸ்மாக் பாரை இடமாற்றம் செய்ய வேண்டும். இந்த கடைக்கு அருகே ஒரு தனியார் மருத்துவமனை உள்ளது இந்த கடையால் பல்வேறு நோயாளிகளுக்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக இருந்து வருகின்றது எனவே இந்த கடையை உடனடியாக அரசு மூடி, இடமாற்றம் செய்து பொதுமக்கள், மற்றும் மருத்துவமனை நோயாளிகளை காக்க வேண்டும். அவ்வாறு செய்யாத பட்சத்தில் அடுத்த மாதம் 22ம் தேதி கோவில் மேடு பகுதியில், இந்த கடைக்கு எதிராக பொதுமக்களை திரட்டி மறியல் போராட்டம் நடத்த படும் என தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இஸ்லாமிய பெருமக்களுக்கு மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி தலைவர் காயல் அப்பாஸ் ஹஜ் பெருநாள் வாழ்த்து



மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி மாநில தலைவர் காயல் அப்பாஸ் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது.

இறைவனின் தூதர்களாக இஸ்லாமியர்களால் நம்பப்படுபவர்களில் ஒருவர் இப்ராஹீம்நபி. இவர் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்பு, இன்றைய ஈராக்கில் வாழ்ந்து வந்தார். நெடுநாட்களாக குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்து வந்த இவருக்கு, இறுதியில் இவரின் இரண்டாவது மனைவி ஹாஜரா மூலம் ஓர் ஆண் மகவு பிறந்தது. இஸ்மாயில் எனப் பெயரிடப்பட்ட அந்தக் குழந்தையின் வழி வந்தவர்களே இன்றைய அராபியர்கள். இஸ்மாயில் பால்யப் பருவத்தை எட்டியிருந்த பொழுது, அவரைத் தனக்குப் பலியிடுமாறு இறைவன், இப்ராஹிம் நபி கனவின் மூலம் கட்டளையிட்டார்.

இதைப்பற்றி இஸ்மாயிலிடம் கூறிய இப்ராஹிம் நபி அவரின் அனுமதியுடன் பலியிடத் துணிந்தபொழுது, ஜிப்ரயீல் எனப்படும் வானவரை அனுப்பி, இறைவன் அதைத் தடுத்தார். மேலும், ஓர் ஆட்டை இறக்கிவைத்த இறைவன், இஸ்மாயயிலுக்குப் பதில் அந்த ஆட்டை அறுத்துப் பலியிடுமாறு இப்ராஹிம்நபிக்கு கட்டளையிட்டார்.

மேற்கூறிய இந்த சம்பவத்தின் அடிப்படையிலேயே, தியாகத்திருநாள் கொண்டாடப் படுகின்றன. இப்ராஹிம் நபியின் தியாகத்தை நினைவு கூறும் வகையில், இஸ்லாமியர்கள் தங்கள் வீட்டில் ஆடுகளைப் பலியிட்டு, இந்த பண்டிகையை ஹஜ் பெருநாளாக கொண்டாடுகின்றன. இவ்வாறு காயல் அப்பாஸ் கூறியுள்ளார்.

# த.வெ.கவில் இனைந்த மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்



செங்கல்பட்டு மாவட்டம் நடந்து முடிந்த 2026 சட்டமன்ற தேர்தலில் நான்கு முனை போட்டியில் களம் கண்ட திமுக அதிமுக தவெக நாதக ஆகிய கட்சிகளில் தமிழகத்தில் பெரும்பான்மையாக வெற்றி பெற்ற தமிழக வெற்றி கழகம் தலைவர் விஜய் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டார் அதனைத் தொடர்ந்து அதிமுக இரண்டு அணியாக பிளவுபட்டது இதில் மதுராந்தகம் சட்டமன்றத்தொகுதியில் அதிமுக சார்பில் வெற்றி பெற்ற மரகதம் குமரவேல் நமக்கு வாக்களித்த பொதுமக்களின் நலன் கருதி தமிழக வெற்றி கழகத்தில் தமிழக முதல்வர் விஜய் அவர்களின் முன்னிலையில் தன்னை இணைத்துக் கொண்டார் அதன் அடிப்படையில் இன்று காலை திருப்போரூர் அருகே தையூர் கிராமத்தில் உள்ள மரகதம் குமரவேல் இல்லத்தில் சந்தித்து தவெக மதுராந்தகம் மகளிர் மாவட்ட நிர்வாகி இரும்பேடு சுமதி சாமிக்கண்ணு ஆடை போர்த்தி பூங்கொத்து வழங்கி தவெகவில் இனந்தமைக்கு நன்றிதெரிவித்து வாழ்த்துக்கள் தெரிவித்தார் அருகில் கட்சி நிர்வாகி நிரேஷ்குமார் உள்ளனர்

## ரெட்டியார்பட்டியில் நீர் மோர் பந்தல் திறப்பு

# முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சிவ பத்மநாதன் துவக்கி வைத்தார்



தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் கழக செயலாளர் வழக்கறிஞர் சிவ பத்மநாதன் ஊத்துமலை அருகே உள்ள ரெட்டியார்பட்டியில் நீர் மோர் பந்தல் திறந்து வைத்தார் இது பற்றிய விவரமாவது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் மாண்புமிகு தளபதி யார் அவர்களின் ஆணைக்கிணங்கவும் கழக இளைஞரணி செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சித்தலைவர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஐயம்பெருமாள் அவர்கள் ஏற்பாட்டில் ரெட்டியார்பட்டியில் நீர்மோர் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது நிகழ்ச்சிக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஐயம்பெருமாள் அவர்கள் தலைமை தாங்கினார்கள் கிளைக் கழகச் செயலாளர் மாஞ்சோலைத்துறை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் லட்சுமணன் ஆகியோர் முன்னிலைவைத்தனர் வழக்கறிஞர் சார்லஸ் வரவேற்று பேசினார் நிகழ்ச்சியில் முன்னாள் திமுகமாவட்ட கழக செயலாளர் சிவபத்மநாதன் அவர்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு மோர் மற்றும் பழங்கள் வழங்கினார் நிகழ்ச்சியில் முத்தம்மாள் புரம் ஊராட்சி மன்ற தலைவர் ஆர் பி முருகன் தெற்கு காவலாக்குறிச்சி ஊராட்சி மன்ற தலைவர் செல்வராஜ் கீழக்கலங்கல் ஊராட்சி மன்ற தலைவர் சந்திரசேகர் வடக்கு காவலா குறிச்சி ஊராட்சி மன்ற முன்னாள் துணைத் தலைவர் கணபதி ஆலங்குளம் ஒன்றிய இளைஞரணி முன்னாள் அமைப்பாளர் ரவிச்சந்திரன் காவலாக்குறிச்சி செயலாளர் அந்தோணி ராஜ் வழக்கறிஞர் ரமேஷ் மாவட்ட பிரதிநிதி அன்பழகன் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அசோக், ஹரி கிருஷ்ணன் ஆட்டோ சங்கத் தலைவர் முருகேசன் ஆட்டோ சங்க நிர்வாகிகள் இயேசு ராஜா, ராமர் வெங்கடேஷ் ,கழக முன்னோடிகள் மாரீஸ்வரன் அம்மாசி மதன் பிரபாகரன் முருகன் பிரபாகரன் முருகன் கடங்கநேரி மாடசாமி துரைராஜ் உள்ளிட்ட கழகநிர்வாகிகள் கலந்து கொண்டனர் கிளைக் கழக செயலாளர் முருகேசன் அவர்கள் நன்றி கூறினார்கள்.

# தென்காசி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் பதவி ஏற்பு




தென்காசி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக திரு அசோக்குமார் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார் அவருக்கு தென்காசி மாவட்ட அனைத்து காவல் நிலைய ஆய்வாளர்கள் உதவி ஆய்வாளர்கள் போக்குவரத்து ஆய்வாளர் மற்றும் போக்குவரத்து உதவி ஆய்வாளர்கள் காவலர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் வட்டாட்சியர்கள் சமூக ஆர்வலர்கள் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர் புதிய காவல்துறை கண்காணிப்பாளர் அசோக் குமார் காவல்துறை அணிவகுப்பு மரியாதை ஏற்றுக்கொண்டு காவல்துறை கண்காணிப்பாளராக பொறுப்பேற்றுக் கொண்டார் தென்காசி மாவட்டத்தின் 9-வது மாவட்ட காவல்* கண்காணிப்பாளராக S.அசோக் குமார் அவர்கள் (25.05.2026) பொறுப்பேற்றுக் கொண்டார். இதற்கு முன்பு தென்காசி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக திரு மயில்வாகனம் இ '.கா.. பஅவர்கள் தமிழக சட்டமன்ற பொது தேர்தலின் போது மிகச் சிறப்பாக பணியாற்றி தேர்தலை வெற்றிகரமாக நடத்திமுடித்தார் அதனைத் தொடர்ந்து தமிழக வெற்றிக் கழகம் பெருவாரியான தொகுதிகளில் வெற்றி பெற்று புதிய ஆட்சி அமைத்தவுடன் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் திரு மயில்வாகனம் அவர்களை சிறப்பு படைக்கு மாற்றி உத்தரவிட்டார் அதனைத் தொடர்ந்து அவர் சென்னையில் சிறப்பு படை கண்காணிப்பாளராக பதவி ஏற்றத்தை தொடர்ந்து தென்காசி மாவட்டத்திற்கு புதிய காவல்துறை கண்காணிப்பாளர் நியமிக்கப் பட்டார்.

## கோவையில் வரும் 27ம் தேதி முதல் துவங்குகிறது

# ஆண்கள் மற்றும் பெண்களுக்கான அகில இந்தியக் கூடைப்பந்து போட்டிகள்

### 59 வது ஆண்களுக்கான நாச்சிமுத்து கவுண்டர் கோப்பை மற்றும் 23 வது பெண்களுக்கான சி.ஆர்.ஐ. பம்ப்ஸ் கோப்பைக்கான போட்டிகள் துவக்கம்



கோவை, மாவட்ட கூடைப்பந்து சங்கம், கடந்த 58 ஆண்டுகளாக ஆண்களுக்கான அகில இந்திய கூடைப்பந்து போட்டியையும், கடந்த 22 ஆண்டுகளாக பெண்களுக்கான அகில இந்திய கூடைப்பந்து போட்டியையும் வெற்றிகரமாக நடத்தி வருகிறது.

கோவை மாநகராட்சியும், கோவை மாவட்ட கூடைப்பந்து சங்கமும் இணைந்து, சமீபத்தில் சர்வதேச தரத்திலான புதிய செமி-உள்விளையாட்டு அரங்கத்தை திறந்து வைத்துள்ளது. இந்த ஆண்டிற்கான போட்டிகள், மே 27ம் தேதி முதல் 31ம் தேதி வரை நடைபெற உள்ளது. செய்தியாளர்கள் சந்திப்பு கோவை வ உ சி பூங்கா மைதானத்தில் நடைபெற்றது. அப்பொழுது.. தமிழ்நாடு கூடைப்பந்து கழக துணைத் தலைவரும், கோவை மாவட்ட கூடைப்பந்து கழகதலைவருமான ஜி.செல்வராஜ், துணைத் தலைவர்கள் ஆனந்த், அசோக், பழனிச்சாமி, நவரத்தன் குமார் பாப்னா, சித்தார்த், மொஹம்மது இஷாக், செயலாளர் பாலாஜி, துணை செயலாளர் தீபாலா ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது..கோவைமாவட்ட கூடைப்பந்து மைதானத்தில், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கோவை மாவட்ட கூடைப்பந்து கழகத்துடன், கோவை மாநகராட்சி இணைந்து, சர்வதேச தரத்திலான செமி உள்விளையாட்டு அரங்கத்தை அமைத்துள்ளது. அதில் ஆண்களுக்கான போட்டியில் நாட்டின் முன்னணி 8 அணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. பெண்களுக்கான போட்டிகளிலும், 8 அணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் வெற்றி பெறும் வெற்றியாளருக்கு ரூ.1,00,000 ரொக்கப் பரிசும் மற்றும் நாச்சிமுத்து கவுண்டர் கோப்பையும், இரண்டாம் இடம் - ரூ.50,000 ரொக்கப் பரிசும் மற்றும் டாக்டர் என். மகாலிங்கம் கோப்பையும் மற்றும் சிறப்பாக விளையாடும் வீரருக்கு சிறந்த விளையாட்டு வீரர் என்ற விருதும் வழங்கப்படும்

பெண்கள் பிரிவில் வெற்றியாளருக்கு ரூ.75,000 ரொக்கப் பரிசும் மற்றும் சி.ஆர்.ஐ. பம்ப்ஸ் கோப்பையும், இரண்டாம் இடம் - ரூ.50,000 ரொக்கப் பரிசும் மற்றும் சி.ஆர்.ஐ. பம்ப்ஸ் கோப்பையும் மற்றும் சிறப்பாக விளையாடும் வீராங்கனைக்கு சிறந்த விளையாட்டு வீராங்கனை என்ற விருதும் வழங்கப்படும் என தெரிவித்தார்.

# கடையநல்லூர் கானாங்குளத்தில் கட்டப்பட்ட ஆக்கிரமிப்புகளை அகற்ற நீர்வளத் துறை பொறியாளர் காவல்துறைக்கு கடிதம்



தென்காசி மாவட்டம் கடையநல்லூர் தாலுகா மற்றும் நகரத்தில் அமைந்துள்ள ஜெகவீரராமபேரி மறுகால் ஓடையில் காணங்குளம் பகுதியில் கட்டிடங்கள் கட்டி ஆக்கிரமிப்புகள் செய்துள்ளது அளவீடு செய்யப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டது இது குறித்து கடையநல்லூர் வருவாய் வட்டாட்சியர் 19 /11/ 2024 அன்று சிற்றாற்று வடிநில பிரிவு இளநிலை பொறியாளர் நீர்வளத்துறை அவர்களுக்கு கடிதம் அனுப்பி உள்ளார் மேற்படி கடிதத்தின் நகலில் ஜெகவீரராமப்பேரி கானாங்குளத்தில் பிளாக் ஹெச் வார்டு எண் 12 நகர அளவ எண் 269 மற்றும் 270 கட்டிடங்கள் கட்டி ஆக்கிரமிப்புகள் செய்துள்ளதாக கடிதம் வழங்கியுள்ளார் 21 நாட்களுக்குள் ஆக்கிரமிப்புகளை அகற்றவும் மேற்படி ஆக்கிரமிப்பாளர்களுக்கு 11/ 12 /2024 அன்று கடிதம் கொடுத்தும் மேற்படி கட்டிடத்தில் ஆக்கிரமிப்பாளர்கள் கடிதம் ஒட்டப்பட்டது ஆனால் இது நாள் வரை ஆக்கிரமிப்புகள் அ கற்றப்படாததால் மேற்படி ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றிட இத்துறை மூலமாக 21 /5/ 2026க்குள் தகுந்த காவல் பாதுகாப்பு வழங்கும்படி இளநிலை பொறியாளர் சிற்றாற்று வடிநிலப் பிரிவு மா: உதயகுமார் உத்தரவிட்டுள்ளார் இது குறித்த உத்தரவினை மதினா நகர் ஜும்மா மஸ்ஜித் மஹல்லா ஹனபி ஜமாத் தலைவர் அவர்களுக்கும் மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றி இவ் அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது புளியங்குடி காவல் துணை கண்காணிப்பாளர் கடையநல்லூர் காவல் ஆய்வாளர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது கடையநல்லூர் வருவாய் வட்டாட்சியர் அவர்களுக்கும் கடையநல்லூர் மின் விநியோக உதவி பொறியாளர் அவர்களுக்கு மேற்படி இடத்தில் மின் விநியோகம் ஏதும் செய்யப்பட்டு இருந்தால் அதனை ரத்து செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டது மேலும் கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு மேற்படி ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்தில் ஏதேனும் கட்டிட அனுமதி வழங்கப்பட்டிருந்தால் அதனை ரத்து செய்து தகவல் தெரிவிக்கவும் கேட்டுக் கொள்ளப்பட்டது தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை உதவி செயற்பொறியாளர் நீர்வள ஆதாரத்துறை சிற்றாற்று வடிநெல்ல உப கூட்டம் அவர்களுக்கும் செயற்பொறியாளர் நீர்வள ஆதாரத்துறை சிற்றாற்று வடிநெலக் கூட்டம் தென்காசி குடியிருப்பு அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளனர் இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு ஆறு மாத காலமாக கடிதம் கொடுக்கப்பட்டும் எவ்வித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை பொதுமக்களை வியப்பில ஆழ்த்தி உள்ளது தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்தாலும் பொதுவாக மதத்தின் பெயராலோ ஜாதியின் பெயராலோ கட்சியின் அரசியல் கட்சிகளின் பெயராலோ ஆக்கிரமிப்பு செய்தாலும் அதை உடனடியாக அகற்ற வேண்டியது அரசின் கடமையாகும் எப்போது ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என்பது பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது

# ஈரோட்டில் காங். செயலாளருக்கு மாபெரும் வரவேற்பு: பொன்னாடை போர்த்தி நிர்வாகிகள் உற்சாகம்





அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் செயலாளரும், கிருஷ்ணகிரி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஏ.செல்லக்குமார் நேற்று 26/05/2026 சென்னையில் இருந்து கோவை எக்ஸ்பிரஸ் ரயில் மூலம் ஈரோடு வந்தடைந்தார்.

அவரை ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் பா.ராஜேஷ் ராஜப்பா, தெற்கு மாவட்ட தலைவர் கே.பி. முத்துகுமார், வடக்கு மாவட்ட தலைவர் கே.பி. உதயகுமரன் ஆகியோர் தலைமையில் காங்கிரஸ் நிர்வாகிகள் கம்பீரமாக வரவேற்றனர்.

மாவட்ட நிர்வாகிகள், வட்டார, மண்டல, கிராம கமிட்டி தலைவர்கள், துணை அமைப்புகளின் தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு தலைவர்கள் மற்றும் காங்கிரஸ் செயல் வீரர்கள் திரளாக கூடி உற்சாக வரவேற்பு அளித்தனர்.

தொடர்ந்து ஈரோடு காலிங்கராயன் ஒய்வு விடுதியில் டாக்டர் செல்லக்குமாருக்கு நிர்வாகிகள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். இந்நிகழ்வில் கட்சியினர் பெருமளவில் பங்கேற்றனர்.

# மே 30 வரை உள் தமிழக பகுதிகளில் வெப்பநிலை அதிகரிக்க வாய்ப்பு



சென்னை: உள் தமிழக பகுதிகளில் ஓரிரு இடங்களில் மே 30-ம் தேதி வரை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை உயரக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய உயரதிகாரியும், விஞ்ஞானியுமான வி.ஆர். துரை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கடந்த 24 மணி நேரத்தில், தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக, வேலூர் மாவட்டம் விரிஞ்சிபுரத்தில் 8 செ.மீ., கிருஷ்ணகிரி மாவட்டம் கக்கதாசத்தில் 6 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் சுமார் 3.1 கி.மீ., முதல் 7.6 கி.மீ., உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இது தவிர, மத்திய மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக, கோயம்புத்தூர், திருப்பூர் மாவட்டங்களின் மலைப்பகுதிகள், நீலகிரி, ஈரோடு, சேலம், தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் செவ்வாய்க்கிழமை (மே 26) இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

மே 27-ம் தேதி முதல் மே 31-ம் தேதி வரை, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடியுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

அதிகபட்ச வெப்பநிலை: உள் தமிழக பகுதிகளில் ஓரிரு இடங்களில் 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகபட்ச வெப்பநிலை உயரக்கூடும்.

மே 29-ம் தேதி வரை அதிக வெப்பநிலையும், அதிக ஈரப்பதமும் இருக்கும் நிலையில், கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அசவுகரியம் ஏற்படலாம்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்றும், நாளையும் (மே 26, 27) வானம் ஓரளவு மேகமூட்டமாக காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 40 முதல் 41 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கக்கூடும்.


மீனவர்களுக்கான எச்சரிக்கை:

தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார்வளைகுடா, குமரிக்கடல் பகுதி, தெற்கு வங்கக்கடலின் அநேக பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகள், அந்தமான் கடல் பகுதி, தெற்கு வங்கக்கடலின் அநேக பகுதிகளில் மே 30-ம் தேதி வரை பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும். எனவே, இப்பகுதிகளுக்கு மீனவர்கள் மேற்படி தேதி வரை செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.



ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் தலைமையில் ஈரோடு மாநகராட்சி மாமன்ற கூட்ட அரங்கில் நேற்று (26.05.2026) மே மாத மாமன்ற சாதாரண கூட்டம் நடைபெற்றது. ஆணையாளர் அர்பித் ஜெயின், துணை மேயர் வே.செல்வராஜ் , மண்டல தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட மாநகராட்சி உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு



ஈரோடு மாவட்டத்தில், தமிழ்நாடு மாநில வாணிப கழக (டாஸ்மாக்) சில்லறை விற்பனை கடைகள் மொத்தம் 182 கடைகள் இயங்கி வருகின்றது. மலை பிரதேசப்பகுதியில் இயங்கி வரும் 3 கடைகளில் விற்பனை செய்யப்படும் மதுபானங்களைவாடிக்கையாளர்கள் அருந்திய பின் காலி மதுபான புட்டிகளை அதே கடைகளில் திரும்ப பெற்றுக்கொள்ளும் திட்டம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு, தற்போது அமலில் உள்ளது. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஆணையின்படி மீதமுள்ள 179 கடைகளுக்கு 03.12.2025 முதல் காலி மதுபான புட்டிகளை திரும்ப பெறும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, 03.12.2025 முதல் அனைத்து வகை மதுபானங்கள் மற்றும் பீர் வகைகளுக்கு சில்லறை விற்பனைக் கடைகளில் விற்பனை செய்யும் போது அதிக பட்ச விற்பனை விலையுடன் சேர்த்து 10 ரூபாய் கூடுதலாக பெறப்படும். இதற்கான கடை எண் குறிப்பிட்டு, EC Rs.10/- என அச்சிட்ட ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருக்கும். மேற்படி மதுபானங்களின் காலி புட்டிகளை வாங்கிய கடைகளில் ஸ்டிக்கரோடு திருப்பி ஒப்படைக்கும் போது வாடிக்கையாளர்களுக்கு .10/- திரும்ப வழங்கப்படும். எனவே, வாடிக்கையாளர்கள் இனி வருங்காலங்களில் காலி மதுபான பாட்டில்களை நீர் நிலைகள் மற்றும் பொது வெளியில் தூக்கி வீசாமலும், உடைக்காமலும் சம்மந்தப்பட்ட மதுபான கடைகளில் திரும்ப ஒப்படைத்து ரூ.10/- திரும்ப பெற்றுக்கொள்ளுமாறும், இத்திட்டத்திற்கு மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

# ஈரோடு மாவட்ட நீர்நிலைகளில் இலவசமாக வண்டல் மண் எடுக்க விண்ணப்பங்கள் வரவேற்பு ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி அறிவிப்பு



ஈரோடு மாவட்டத்தில் நீர்வளத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 411 ஏரி, குளங்களில் படிந்துள்ள 1,27,72,883 கன மீட்டர் அளவுள்ள வண்டல் மண் / களிமண் விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் மண்பாண்டத் தொழிலாளர்கள் தங்களின் சொந்தப் பயன்பாட்டிற்காக இலவசமாக வெட்டி எடுத்துச் செல்ல ஈரோடு மாவட்ட சிறப்பு அரசிதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் தற்பொழுது 361 நீர்நிலைகளில் 51,82,200 கனமீட்டர் வண்டல் மண் / களிமண் எடுக்கமாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார். இந்த மண்ணை வட்டாட்சியரின் அனுமதி பெற்று, அதிகபட்சமாக 30 நாட்களுக்குள் எடுத்துக்கொள்ள வேண்டும். விருப்பமுள்ளவர்கள் www.tnesevai.tn.gov.in என்ற இணையதளம் வழியாக விண்ணப்பிக்கலாம்.

இதன்படி, விவசாயிகள் தங்களின் நன்செய் நிலத்திற்கு ஒரு ஏக்கருக்கு 75 கனமீட்டர் (அல்லது ஒரு ஹெக்டேருக்கு 185 கனமீட்டர்) வரையிலும், புன்செய் நிலத்திற்கு ஒரு ஏக்கருக்கு 90 கனமீட்டர் (அல்லது ஒரு ஹெக்டேருக்கு 222 கனமீட்டர்) வரையிலும் வண்டல் மண் எடுத்துக்கொள்ளலாம். மேலும், பொதுமக்களின் சொந்தப் பயன்பாட்டிற்கு 30 கனமீட்டர் வரையிலும், மண்பாண்டத் தொழிலாளர்கள் தங்களின் தொழில் தேவைக்காக 60 கனமீட்டர் வரையிலும் களிமண்ணைக் கட்டணமின்றி எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படும்.

இந்தச் சலுகையைப் பெற விண்ணப்பதாரரின் இருப்பிடம் அல்லது அவரது விவசாய நிலம், மண் எடுக்கப்படும் நீர்நிலை அமைந்துள்ள அதே வருவாய் வட்டத்திற்குள் (Taluk) இருக்க வேண்டும். விவசாயிகள் தங்களின் விண்ணப்பத்துடன் சிட்டா மற்றும் அடங்கல் நகல்களை இணைக்க வேண்டும். மண்பாண்டத் தொழிலாளர்கள் மண் எடுக்க விண்ணப்பிக்கும்போது, சம்பந்தப்பட்ட மண்பாண்டத் தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் சான்று அல்லது கிராம நிர்வாக அதிகாரியின் (VAO) சான்றைச் சமர்ப்பிக்க வேண்டும்

மேலும்விபரங்களுக்கு சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு விபரங்களை பெற்றுக்கொள்ள ஈரோடுமாவட்ட ஆட்சித்தலைவரால் தெரிவிக்கப்படுகிறது

# தவெக வாக்குறுதிக்கு மாறானது பயிர்க் கடன் தள்ளுபடி அறிவிப்பு: இந்திய கம்யூ. அதிருப்தி



"விவசாயிகள் பயிர்க் கடன் தள்ளுபடி ஏமாற்றம் அளிக்கிறது. தமிழ்நாடு முதல்வர் விஜய், விவசாயிகள் சாகுபடி செலவின வகைக்காக கூட்டுறவு வங்கிகளில் பெற்றுள்ள பயிர்கடன்களில் ரூ.50 ஆயிரம் வரையான கடன்கள் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் என நேற்று அறிவித்துள்ளார். இது தலைமுறை, தலைமுறையாக கடன் சுமையில் சிக்கித் தவிக்கும் விவசாயிக ளின் துயரங்களை குறைக்காது.

தமிழக வெற்றிக் கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், "5 ஏக்கருக்கும் குறைவான நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியுள்ள பயிர்க் கடன்கள் முற்றிலுமாக தள்ளுபடி செய்யப்படும்" என வழங்கியுள்ள உறுதி மொழிக்கும் மாறானது.

இதுவரை விவசாயிகளுக்கான கடன் நிவாரணம் சாகுபடி நிலத்தின் அளவை அடிப்படையாகக் கொண்டதாகவே வழங்கப்பட்டது. இந்த வழிமுறையை மாற்றி "பண மதிப்பை" அடிப்படையாகக் கொண்டு வகுத்துள்ள புதிய முறையும் ஏற்கதக்கதல்ல. மாவட்டத்துக்கு மாவட்டம், பயிருக்கு பயிர் சாகுபடிச் செலவுகள் மாறுபடும் என்பதை அரசு கருத்தில்கொள்ளவேண்டும்.

இதனை கருத்தில் கொண்டு தேர்தல் வாக்குறுதிப்படி 5 ஏக்கருக்கும் குறைவான நிலம் உள்ள விவசாயிகளின் பயிர் கடன்களை முற்றிலும் தள்ளுபடி செய்து, மறு உத்தரவு வழங்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, முதல்வரை கேட்டுக் கொள்கிறது" என்று அவர் கூறியுள்ளார்.

# Fishrice meals at 5, curbs on liquor shops: Bengal CM Suvendu Adhikari announces new initiatives



CM Suvendu Adhikari stated that the West Bengal government would also set up an AYUSH department, delinking it from the state health department.

West Bengal chief minister Suvendu Adhikari announced fresh initiatives from the state government for the welfare of the people, including affordable fish-rice meals, Annapurna Yojana, and rules for liquor shops.

Adhikari said that from May 27, his government will begin issuing forms for the Annapurna Yojana, under which women will receive 3,000 per month. He further said that liquor shops will not be allowed within a one-kilometre radius of schools, colleges and places of worship.

The CM also said his government will introduce fish and rice meals for 5 at around 400 dedicated canteens twice a week, news agency PTI reported.

"Annapurna Yojana forms will be issued from the state secretariat from tomorrow. All Indians are eligible to receive benefits under the scheme," Adhikari told reporters after an administration meeting at Kalyani, Nadia.

He further stated that the West Bengal government would also set up an AYUSH department, delinking it from the state health department.

Suvendu Adhikari has announced a slew of initiatives and schemes, taking several decisions for the state, since he took oath as the chief minister of West Bengal on May 9. He became the CM of the first Bharatiya Janata Party government in the state after the saffron party registered a landslide victory in the 2026 assembly elections, ending Trinamool Congress chief Mamata Banerjee's nearly 15 year-long rule.

Suvendu's series of decisions in Bengal

Crackdown on illegal immigrants -- Last week, the CM directed all district magistrates to set up "holding centres" for apprehended illegal immigrants before their deportation, taking the BJP's electoral promise to "detect, delete and deport" all aliens forward.

The Foreigners' Branch, SAARC Visa Section, of the state home department, headed by Adhikari, issued an order, saying that holding centres should be set up after a May 2025 order from the Union home ministry.

The directive came days after Adhikari ordered a crackdown on illegal Bangladeshi immigrants and asked the state police to detain and hand them over to the BSF for deportation.

New recruitment policy --

The West Bengal CM also said the state government will introduce a new recruitment policy in the next budget session to curb irregularities in public sector hiring.

"The state government will launch a fresh recruitment policy in the next budget session. We shall introduce bills in the next Assembly to support the new policy," he said at an event in Kolkata on May 23.

Probe into 2021 post-poll violence --

Previously, Adhikari ordered police stations across the state to launch an investigation into the 2021 post-poll violence, saying that FIRs must be lodged in every incident of murder and assault that was not previously probed.

"Let the families of those who died or were injured in political violence over the last five years file complaints with evidence. If they don't have evidence, then the police will investigate and lodge FIRs," Adhikari said.

He described the 2021 assembly election in Bengal as a "black chapter", adding that workers were hounded and murdered at the time. "As many as 12,500 FIRs have been lodged. If the accused are found guilty, we will put them in jail," he added.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.